ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி – 2

# தமிழவேள் மாணவர் இதழ்

பருவ இதழ்

இதழ் 2 * ஆசிரியர் : முனைவர்.சு.பானுமதி தமிழ்த்துறை தலைவர் முனைவர்.க.சுப்புலட்சுமி இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை * 2019-2020 முதற்பருவம்

## நான் விரும்பும் கவிஞர் பாரதியார்

### முன்னுரை

"பாட்டுக்கொரு புலவன் பாரதி" என்று அனைவராலும் போற்றப்படுபவர் மகாகவி பாரதியாரே ஆவார். அவருடைய பாடல்கள் மக்களிடையே நாட்டு விடுதலையும், தேசிய ஒருமைப்பாட்டையும், சாதி ஒழிப்பையும் பெண்விடுதலையையும் ஏற்படுத்தின. பாட்டுத்திறத்தால் இவ்வையகத்தை ஆட்டிப் படைத்த பாரதியே நான் விரும்பும் கவிஞராவார்.

### இளமைப்பருவம் :

பாரதியார் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டையாபுரத்தில் 1882 ஆம் அண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் சின்னச்சாமி இலக்குமி அம்மாள், ஆவர் இவர் தம் 11-ஆம் வயதிலேயே கவிதை புனைந்து பாரதி என்னும் பட்டத்தைப் பெற்றார். பாரதி தம் 15-ம் வயதில் செல்லம்மாளைத் திருமணம் செய்து கொண்டார்.

### பாரதியாரின் பணிகள் :

இவர் 1904-ஆம் ஆண்டு எட்டையாபுர மன்னரிடம் பணியாற்றினார். பின்னர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். சுதேசமித்திரன் நாளிதழில் உதவியாசிரியராகவும் சக்கரவர்த்தினி மாத இதழில் பொறுப்பாசியராகவும் பணி செய்தார். 1906-இல் "இந்தியா" நாளிதழிலும் "பாலபாரதி" என்ற ஆங்கில ஏட்டிலும் பொறுப்பாசிரியராக இருந்தார்.

### விடுதலை வேட்கை :

"என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்" என்ற பாடலும் "ஆயிரம் உண்டிங்கு சாதி – எனில் அன்னியர் வந்து புகலென்ன நீதி" என்ற பாடலும் நாட்டு மக்களிடையே விடுதலை உணர்வையும் ஆங்கில ஆதிக்கத்தின் எதிர்ப்பையும் ஏற்படுத்தின.

### நாட்டுப்பற்று :

*"பாருக்குள்ளே நல்லநாடு பாரத நாடு"*

*"பாரதநாடு பழம்பெரும்நாடு – நீரதன்*
*புதல்வர் அந்நினை வகற்றாதீர்"*

என்னும் பாடல்கள் நாட்டு மக்களிடையே நாட்டப்பற்றை உண்டாக்கின.

### சமுதாயத் தொண்டு :

*"சாதிகள் இல்லையடி பாப்பா"*

என்று சாதி ஒழிப்பை உணர்த்தினார்.

*"மாதர்தம்மை இழிவுசெய்யும்*
*மடைமையைக் கொளுத்துவோம்".*

என்று பெண் விடுதலையைப் பாடினார்.

*"தனியொருவனுக் குணவிலை யெனில்*
*சகத்தினை அழித்திடுவோம்".*

என்று சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

### தேசிய ஒருமைப்பாடு :

*"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்*
*மொய்ம்பெற ஒன்றுடையாள்"* –

என்னும் பாடலும்.

"எல்லாரும் ஓர்குலம் : எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் இந்நாட்டு மன்னர்" – என்னும் பாடலும் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றன.

முன்னறி புலவர் பாரதி :

*"ஆடுவோமே பள்ளு பாடுவோமே*
*ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று"*
என்னும் பாடலும்.
*"காசி நகர்புலவர் பேசும் உரைதான்*
*காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்".*
என்னும் பாடலும் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளைத் தம்காலத்திலே பாடியதற்குச் சான்றாக உள்ளன இதனால் பாரதியார் முன்னறி புலவராகத் திகழ்கிறார்.

முடிவுரை :

உலகமகா கவியாக விளங்கிய பாரதி 11.09.1921 அன்று மண்ணுலகைவிட்டு விண்ணுலகை அடைந்தார். பாரதி காட்டிய வழியைப் பின்பற்றி வீடும் நாடும் நலம் பெறச் செய்வோம்.

- த.நல்லம்மாள்
பி.ஏ.தமிழ்
முதலாம் ஆண்டு

## சிறுகதை

### ஈக்கள் யார்? தேன் எது?

ஒரு வியாபாரி தன் வாடிக்கையாருக்கே தேன் விற்றுக் கொண்டிருந்தான். வியாபாரியின் கையிலிருந்து தேன் பாத்திரம் திடீரென்று கீழே விழுந்தது நிரம்பத் தேன் தரையில் கொண்டிவிட்டது. முடிந்த அளவு கீழே சிந்திவிட்ட தேனை வியாபாரி எடுத்து விட்டான். ஆயினும் சிறிதளவு தேன் தரையோடு ஒட்டிக் கொண்டுவிட்டது. அநேக ஈக்கள் தேனின் இனிப்புச் சுவையின் ஆசையால் வந்து தேன் மேல் உட்கார்ந்தன இனிப்பான தேன் அவைகளுக்குப் பிடித்தால் வெகு வேகமாகத் தேனை சாப்பிடத் தொடங்கின வயிறு நிரம்பும் வரை சாப்பிட்டுக் கொண்டிருந்தன வயிறு நிரம்பியதும் ஈக்கள் பறந்து செல்ல விரும்பின. ஆனால் அவைகளின் இறக்கைகள் தேனில் ஒட்டிக் கொண்டுவிட்டன. பறக்க முயற்சி செய்யச் செய்ய மேலும் மேலும் ஒட்டிக் கொண்டன. அவைகளின் உடல்பூராவும் தேன் ஒட்டிக் கொண்டுவிட்டது. நிறை ஈக்கள் தேனில் புரண்டு புரண்டு இறக்கைகளை விடுவிக்க முடியாமல் இறந்துவிட்டன. நிறை ஈக்கள் இறக்கைகள் ஒட்டிக் கொண்டதால் துடித்துக்கொண்டிருந்தன. ஆனால் இன்னும் பல புதிய ஈக்கள் தேன் உண்ணும் ஆசையால் அங்கே வந்து கொண்டிருந்தன. இறந்தவைகளையும் துடித்துக் கொண்டிருப்பவைகளையும் பார்த்தும் கூட அவைகளால் தேன் உண்ணும் பேராசையை விட முடியவில்லை. ஈக்களின் துன்பநிலையையும் அவைகளின் முட்டாள் தனத்தையும் பார்த்து வியாபாரி சொன்னான்

ஈக்கள் யார்? தேன் எது? சிந்திப்போம்.

மா.மாரியம்மாள்
பி.ஏ.தமிழ்
முதலாம் ஆண்டு



## மதவாதம் தகர்ப்போம்

இறைவனைக் கல்லில் காண்பவர்களே!

அவனை மனக்கண்களில் காணுங்கள்

அயோத்தி அச்சமின்றி இருக்கட்டும்!

பாபர்மசூதி பயமின்றி இருக்கட்டும்!

மதங்களில் வேண்டாம் வேறுபாடு

மத ஒற்றுமையை நீ பாடு!

முருகன் முகமதுவைப் போற்றட்டும்!

அல்லா அரியை அழைக்கட்டும்!

வேளாங்கண்ணி வடிவேலனைச் சுமக்கட்டும்!

உமறுப்புலவர் உமையவளைப் பாடட்டும்!

தொழுவத்தில் தோன்றியவன் தொழுகை
புரியட்டும்!

கீதை கிறிஸ்துவின் கிரீடமாகுக!

குரான் கோபுரத்தின் கலசமாகுக!

ஆகமம் அல்லாவின் அணிகலனாகுக!

இறைவன் ஒன்று

உணர்ந்தால் நன்று!

பிடிவாதம் ஏதுமின்றி

மதவாதம் தகர்ப்போம்

பரப்புவோம் மதத்தையல்ல மனிதத்தை

-சா.முத்துக் கல்யாணி
இளங்கலை தமிழிலக்கியம்
இரண்டாமாண்டு

## டி.செல்வராஜ் சிறுகதைகளில் தனிமனித வாழ்வியல் நெறிகள்

### முன்னுரை

ஒரு படைப்பாளன் தான் வாழ்ந்து வரும் சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கும் போது மக்களின் வாழ்க்கை முறைகளும், சில நிகழ்வுகளும் அவனது கவனத்தை ஈர்க்கின்றன. அவ்வாறு படைப்பாளனின் மனதைக் கவர்ந்த செயல்பாடுகளுக்கும், நிகழ்வுகளுக்கும் தகுந்த வடிவம் கொடுக்கும் போது அவை இலக்கியங்களாக மலர்கின்றன. அந்த வகையில் டி.செல்வராஜ் படைப்புகளில் சிறுகதைகள் சமூகத்தில் பன்முகமாந்தர்களை அடையாளப்படுத்துகின்றன. இவைகள் யாவும் மனித உள்ளத்தில் சமூகத்தின் மீது காணப்படும் ஆர்வமும், சமூகத்தை முன்னேற்றும் எண்ணமும் பிறந்துவிடும். தனிமரம் தோப்பாகாது எனினும் தோப்பாவதற்கு அவை துணைபுரியும். அதுபோல் தனிமனிதன் சமுதாயமாகமாட்டான். எனினும் சமுதாயமாவதற்கு அவன் துணைபுரிவான். தனிமனித வாழ்க்கை சிறக்கும் போது சமுதாயம் சிறப்படையும். மனிதனுடைய கல்வி, தன்னம்பிக்கை, காதல், திருமணம், தனிமை போன்ற தனிமனித தொடர்பான வாழ்க்கை நெறிப்படுத்தும். ஆகவே டி.செல்வராஜ் சிறுகதைகளில் தனிமனித வாழ்வியல் நெறிகள் குறித்து ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

### 1. கல்வி

மனிதருக்கு உயிரும் பொருளும் இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஆகும். இவ்விரண்டையும் இணைத்து மானுடரைச் செயல்பட செய்வது அறிவு ஆகும். கல்வி இல்லாத மனிதன் களர்நிலத்தினைப் போன்றவன். ஒரு நாட்டிற்கும், வீட்டிற்கும், மக்களுக்கும் முக்கியமானது கல்வியே என்றால் அது மிகையில்லை. உடலால் பெற முடியாத வலிமையை அறிவால் பெறமுடியும். அதற்கு கல்வி இன்றியமையாத ஒன்றாகும்.

"பூங்காற்று திரும்புமா?" என்ற சிறுகதையில் சிவகாமி – தாசன் தம்பதியின் மகன் முருகன். சிறுவனாக இருந்தபோதும் கல்வியின் மீது தணியாத தாகத்தினால் படிக்க

விரும்புகிறான். ஆனால் தாசனோ அவன் கல்விக்கு தடை விதிக்கிறான். தறி பழகவிட்டு வருமானம் ஈட்டலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறான். இதனால் மிகுந்த மனவேதனையுற்ற தாய் சிவகாமி கணவனை எதிர்க்கிறாள். இறுதியில் கணவனது வாதமே வென்றது. முருகனது கல்வியும் தடைப்பட்டது. இருந்த போதிலும் தறி நெய்த மீதி நேரங்களில் திருக்குறளை ஆர்வமுடன் கற்றான். ஓர் நாள் இரவில் தாசன் குடி மயக்கத்தில் தெருவில் கிடக்க, மண்ணெண்ணெய் விளக்கேற்றி படிக்க நினைத்த முருகன் திடீர் தியால் வீடு முழுவதும் எரிந்தது. இவ்விபத்தில் தாய் சிவகாமியும், சிறுவன் முருகன் உயிரிழக்கின்றனர். இதனால் மிகவும் மனமுடைந்து போகிறான் தாசன். தனது தம்பியின் மூன்று பெண் பிள்ளைகளும் தறி நெய்வதை கண்டு உள்ளம் பதைபதைத்து, மூன்று பெண் பிள்ளைகளையும் பள்ளிக்குச் செல்ல வழிவகைச் செய்கிறான். இக்கதையில் வரும் சிறுவன் முருகனின் மூலம் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றார். படைப்பாசிரியர்.

"பஞ்சம் பிழைக்கப் போன இடத்தில், குடியை நிறுத்திவிட்டு ராப்பகலாக நெசவு செய்து சிறுகச் சிறுகச் சேர்த்த பண், தம்பியின் குடும்பத்தைக் காப்பாற்ற உதவியதே என நினைத்து நிம்மதி பெருமூச்சு விட்ட தாசன், தம்பி மகள்களை மீண்டும் படிக்க அனுப்பினான்". என்ற வரிகளின் மூலம் கல்வி வாழ்க்கையை மேம்படுத்தும் என்று கூறுகிறார்.

'தொண்டன்' என்னும் சிறுகதையில் தொண்டர் ஆறுமுகம், காங்கிரஸில் சேர்ந்த நாள் முதலாய் காந்தியின் கொள்கைக்கு மாறாக இதுவரை நடந்ததில்லை. எந்த எதிர்பார்ப்பின்றி உண்மையான தொண்டான சேவை புரிந்த ஆறுமுகம் நாடி தளர்ந்து வயது முதிர்ந்து தான் செய்த பணிக்கு நல்ல மதிப்பு இல்லையே என மனமுடைந்த வேளையில் ஒ சேரிப்பெண்.

"கும்பிடறேன் சாமி' இவ்வாறு சொல்லிக் கொண்டே தட்டை அவா முன்னா வைத்துவிட்டு அவர் காலில் விழுந் நமஸ்காரம் செய்தாள்..... 'எம்மவ பட்டணத்திலேருந்து வந்திருக்கான் சாமி' என்று சொல்லிக்கொண்டே சிரித்தாள் எசக்கி 'என்னவோ சாமி நீங்க மட்டும் எம்மவனை பள்ளிக் கூடத்திலே கொண் சேர்த்திருக்காட்டிக்கு இன்னிக்கு நாங்களெல்லாம் நடுத் தெருவிலே தான் என்றாள்".

தொண்டர் ஆறுமுகத்தின் தன்னலமில்லா பணிகளில் இதுவும் ஒன்று. சேரியில் ஓடித்திரியும் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி வைதது. இலவச உணவுக்கும் ஏற்பாடு செய்வார். அவ்வாறு பயனடைந்த எசக்கியின் மகன் இன்று பட்டணத்திலே ஒரு ஆபிஸிலே பியூனா வேலை கிடைத்திருக்கிறது என்றால் தொண்டருக்கு பேரானந்தம் அல்லவா. கல்வியின் பயன் கற்பதனால் மட்டும் இல்லை. கற்க வைப்பதாலும் கிடைக்கும் என்பது இக்கதையின் மூலம் உணரமுடிகிறது.

## 2. தன்னம்பிக்கை

தன்னால் முடியும் என்று தன்மை நம்புவதும் தன்னிடமுள்ள ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதும் தன்னம்பிக்கை ஆகும். இன்றைய அவசர உலகில் போட்டிகள் நிறைந்த உலகில் தன்னம்பிக்கை உள்ள மனிதர்களால் தான் வெற்றிபெற முடியும்.

ஊர்க்குருவியும், பருந்தும் என்ற சிறுகதையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாடசாமி பட்டாளத்திலிருந்து திரும்பியதும் தன் சேரிமக்களுக்கு பாடுபடுவதையே கொள்கையாகக் கொண்டு வாழ்ந்தான். ஊர் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற மாடசாமி

ஊருக்கு பிரஸிடெண்ட் ஆனால். ஆனால் ஊரில் உள்ள மைனர் பிள்ளையால் இதனை தாங்கிக் கொள்ளமுடியவில்லை. இதற்கு மேலாக கலெக்டருடன் ஊர்வலமாக பிள்ளைமார் தெருவில் வரப்போவதை எண்ணி பெருங்கோபம் கொண்டு கலவரம் புரிய கேடி வேலாண்டியையும், அனுப்பி வைத்தார். ஆனாலும் சிறந்த நாட்டுப்பற்றும், தன்னம்பிக்கையும் கொண்ட மாடசாமி கலெக்டர் அருகில் கம்பீரமாக அமர்ந்து பிள்ளைமார் தெருவின் வழியாக வலம் வந்தது ஊர்க்குருவியும் பருந்தாக அமைந்ததாக உணரமுடிகிறது.

"அவனைப் பார்க்க வேண்டுமென்று மைனர் முதல் முதலாக கூப்பிட்டனுப்பிய போது 'மக்காக' வந்து நின்ற மாடசாமி இதர சாதி ஜனங்கள் செய்வதைப் போன்று தோள் துண்டை இறக்கவில்லை. சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் பண்ணவில்லை. இது உண்மையில் நாற்பது வருஷங்களுக்குப் பிறகு ஒருவன் பிள்ளையவர்களின் முகத்தில் காறி உமிழ்வது போன்றிருந்தது"

என்பதிலிருந்து துணிவும் நம்பிக்கையும் உள்ளவனுக்கு இருள் கூட விளக்குகளாகி நாளை பொழுது வெற்றிக்கு வழிகாட்டும் என்பதை விளக்கியுள்ளார்.

காதல் :

மனித வாழ்க்கையில் காதல் என்பது மிக மிக முக்கியமான ஒன்றாகும். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் காதல் செய்ய பிறந்தவர்கள். தாயை, தந்தையை, தாரத்தை, குழந்தையை, காதலியை, இயற்கையை என அவரவருக்கு பிடித்ததைக் காதலிப்பது மனித இயல்பாகும்.

"தென்றல் சுடுமா? என்ற சிறுகதையில் மீனாட்சி தான் நேசித்த சேகரை திருமணம் செய்து கொள்ள துடிக்கிறாள். அதற்கு மறுத்த சேகரைப் பயமுறுத்தி தற்கொலை செய்துகொள்வேன் என்று சொல்லி திருமணத்திற்கு சம்மதம் வாங்குகிறாள். திருமணமும்முடிந்தது. திருமணம் முடிந்தபின் தனக்கு எய்ட்ஸ் இருக்கும் உண்மையைக் கூறுகிறான் சேகர். திருமணத்திற்கு மறுத்ததன் காரணத்தை இப்போது உணருகிறாள் மீனாட்சி. சேகர் மீனாட்சியை அவளது மாமன் மகன் பூபதிக்கு திருமணம் செய்து வைக்க எண்ணுகிறான். ஆனால் மீனாட்சி அதனை ஏற்காது சேகருடன் வாழவே எண்ணுகிறாள். குறையிருந்தாலும் தான் காதலித்தவனையே ஏற்றுக்கொண்ட மீனாட்சியின் மனதினால், ஆசிரியர் உண்மையான காதல் எது என்பதை உணர வைக்கிறார்.

"உங்களை நான் அவமானப்படுத்தவோ ... அசிங்கப்படுத்தவோ ... மனசாரக் கூட நினைக்கமாட்டேன். எனக்கு நீங்க வேணும், உங்க மாறாத அன்பு வேணும்... என்னை விட்டுப் பிரிய மாட்டேன்னு சத்தியம் பண்ணுங்க" என்று கூறுமிடத்தில் காதலன் வலிமை தெரிகிறது.

"தேனை விலக்கிய தேன் சிட்டு என்கிற சிறுகதையில் தான் விரும்பிய ஏழை இளைஞனை மனதார ஏற்று திருமணம் செய்கிறாள் மாதவி. மகளின் திருமணத்தை செய்ய இயலாத மாதவியின் தந்தை தங்கமுத்து, தனது சொந்த மகளான மாதவியின் பெயரில் மாற்றி எழுதி கொண்டுவருகிறான். ஆனால் அதனை புறக்கணித்த மாதவி.

"சாதாரண டெபுடி தாசில்தாரான உங்களால எப்படி இவ்வளவு சொத்துச் சம்பாதிக்க முடிந்தது? எனக் கேட்டாள் .....தலைகவிழ்ந்து போனார் தங்கமுத்து...எத்தனை குடும்பத்தைக் கெடுத்து இந்தச் சொத்தைச் சம்பாதிச்சிருப்பீங்க... எனக்கு வேண்டா உங்க பணத்தால சாதாரண டீச்சரானதே... பெரிய பாவம்... இந்தச் சொத்துக்களை அனாதை ஆசிரமத்துக்குக் கொடுத்திடுங்க" பத்திரங்களை திருப்பிக் கொடுத்தாள் மாதவி."

காதல் என்பது மனதினை மட்டுமே பார்க்கும். என்பதை உணர்த்துகிறார்.

திருமணம் :

திருமணம் என்பது ஆணும் பெண்ணும் அன்பின் வழி ஒருங்கிணைவதாகும். திருமணம் என்பது எதிர்ப்பார்ப்போடுதான் வருகிறது. அதில் சிறிய ஏமாற்றம் வந்தாலும் அந்த வாழ்க்கை களங்கப்பட்டதாய் போய்விடுகிறது. எனவே வாழ்க்கையைப் புரிந்துகொண்டு செயல்பட்டால் ஏமாற்றம் நிகழ வாய்ப்பில்லை.

"அண்ணலின் அன்பு வழி" என்கிற சிறுகதையில் குடிகாரனகாவும், கள்ளச்சாராயம் விற்பவனாகவும் வரும் சக்திவேல், பரமானந்தம் என்கிற காந்தியவாதிக்கு வலுக்கட்டாயமாக மது அருந்த வைக்கிறான். இதனைத் கண்ட நாஸ் வசந்தா அவரை மீட்டு உதவிபுரிகிறாள். ஒருகட்டத்தில் சக்திவேல் அவனது எதிரியான அருண்பாண்டியனால் தாக்கப்பட்டு உயிருக்குப் போராடுகிறான். இதனைக் கண்ட வசந்தா அரசு மருத்துவமனையில் அவனை சேர்த்து குணமடையும் வரையில் கூடவே நின்று சேவைபரிகிறாள். உடல்நலம் பெற்றவுடன் தீராத பகையால் மீண்டும் அருண்பாண்டியனை தாக்க கள்ளச்சாராயத்தின் மூலமாக சதிவேலை செய்கிறான், சக்திவேல் இதனை அறிந்த வசந்தா தடுக்கிறாள்.

" பாப்பாக் கண்ணு... இந்தச் சாராயத்தைச் சாக்கடையிலே ஊத்திடறேன் ... ஆனா நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கனும் ... என்று ஓங்காரமாக சிரித்தான். "நீ நல்லவனா திருந்தினா

...என்னைத் தர தயார்" என்று முழங்கினாள் வசந்தா. என்மீது அன்பும் ஆசையும் இருந்தா, உண்மையா நல்லவனாத் திருந்து, வர்ற காந்தி ஜெயந்தியன்று நமக்கு திருமணம்" என்றாள் வசந்தா. வசந்தா மனைவியாகப் போகிறாள் என்ற இனிக்கும் எண்ணத்தால் தனது கேஷ்டத்தனங்களைத் தூக்கியெறிந்தான் சக்திவேல், நாஸரி ஸ்கூல் பஸ் டிரைவர் வேலைக்கு சேர்ந்தான் சக்திவேல். வசந்தாவின் நெஞ்சத்தில் புகுந்தான்"

பல எதிர்பார்ப்புகளுடன் நடக்கும் திருமணம் இங்கு ஒருவனை நல்வழிப் படுத்துவதற்காக அமைவது நன்மையே என்று வசந்தாவின் மூலம் ஆசிரியர் விளக்குகிறார்.

தொகுப்புரை :

உலகிலுள்ள உயிரினங்களின் பகுத்தறிவைப் பெற்றுள்ள மனித இனமே சிறப்பானதாகும். தனிமனித வாழ்வுக்குத் தேவையான செய்திகளை மையப்படுத்தி டி. செல்வராஜின் படைப்புகள் அமைந்துள்ளன. தன்னம்பிக்கை, கல்வி, காதல், திருமணம் போன்றவைகளின் மூலம் வாழ்வியல் நெறியைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**அடிக்குறிப்புகள்:**

1. தென்றல் சுடுமா? - ப.26
2. நோன்பு - பக்.43,11
3. நோன்பு - ப.64
4. தென்றல் சுடுமா? - ப.11
5. தென்றல் சுடுமா? - ப.70
6. தென்றல் சுடமா? - பக். 40,341,42

**துணைநூற்பட்டியல்:**


1. நோன்பு - டி.செல்வராஜ்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்

சென்னை - 600 098

முதற்பதிப்பு - ஆகஸ்ட் - 2005

2. தென்றல் சுடுமா? - டி.செல்வராஜ்


குறிஞ்சி மலர் பதிப்பகம்

2-143 சடையம் பாளையம்

ம.குமார பாளையம் - 638 183
நாமக்கல் மாவட்டம்.
முதற்பதிப்பு - ஏப்ரல் - 2008.



ச.செல்வ சங்கரி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வு மையம்,
ஏ.பி.சி.மகாலெட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி.



க. கணபதி

தமிழ் இளங்கலை முதலாம்
ஆண்டு

புதைந்து போன காலங்களின்
பொக்கிஷமாய் புத்தகம்....
புன்னகையும் தோன்றும், பொறாமையும் தோன்றும்....
புத்தகமும் ஒரு புதிர்தான்...
மரணத்தின் மரணம் காகிதமாகி
மாமேதையின் கைகளால் காவியமாகிறது...
அகத்தியமும், தொல்காப்பியமும்
ஆயிரமாண்டு வரலாறு கூறும்...
தவமாய் வந்த புத்தகம்
வரமாய் நம் கைகளில் ...
பாக்களால் நிறைந்ததும்,
பாசத்தால் வழிந்ததும்,
காதல் கனிந்ததும்,
கண்ணீர் சிந்தியதும்....
எத்தனையோ முகம் கொண்டாய்....
எழுதாதக் காப்பியம் ஆனாய்....
பக்கங்களோடு உறவாடும்
பழக்கம் சிலருக்குண்டு...
நடை தளர்ந்தோர் கைகளில்,
வாழ்க்கையின் எச்சமாக....
பணி செல்வோர் கைகளில்,
வயதின் மிச்சமாக....
இளைஞனின் கைகளில்,
எதிர்நோக்கும் காலமாக....
புரட்டப் புரட்ட புதிரானாய்....
திருப்பத் திருப்ப விடையானாய்...
உணர்ச்சியின் ஒன்பானாய்,
ஒப்பற்ற ஒளியானாய்...
அறிவின் சுடரானாய்....
ஆழ்மனதின் கனவானாய்....
அறம் கூறும் குறளும்,
புறம் கூறும் நானூறும்,
இராமனின் காவியமும்,
கண்ணனின் பாரதமும்,
நிலைத்தது உன்னாலன்றோ...
நினைவுச் சின்னம் பல கொண்டு
எண்ணம் சிறக்க நின்று
வண்ணக் கோலமான புத்தகமே...
உன்னை, வணங்குகிறேன் கண்களால்.

வெ.மாரிச்செல்
இளங்களை த
மூன்றாம் ஆ